OT/D/P/916

OOTRU ORGANISATION
12/11/84

# கமநலம்



கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் பிரசுரம்

மார்கழி 1975

-/50 சதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமநலம்

கமக்காரர்களின் மத்தியில் தன்னம்பிக்கையையும், மன உறுதியையும் ஏற்படுத்தி, அவர்கள் கிராமிய நிறுவனங்களின் நடவடிக்கைகளில் பூரண பங்கெடுத்து, அவற்றுடன் ஏற்கனவே உள்ள தொடர்பினை மேலும் வலுபடுத்தி நிரந்தரமானதொன்றுக்கிக்கொள்ள இச் சஞ்சிகை உதவும்.


மலர் 2

இதழ் 3+4

மார்கழி 1975

கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் காலாண்டு வெளியீடு


## பொருளடக்கம்

பக்கம்


1. கம்பனித் தோட்டங்கள் தேசியமயம் .. 2
2. மனிதனுக்கு உதவும் பூச்சிகள் ... .. 4
3. இந் நிறுவகம் மேற்கொண்ட ஆராய்ச்சி பணிகள் .. .. .. .. 7
4 விளைபொருட்களை விற்பதில் ஏற்படும் சிக்கல் 10
5. வனத்தை வளமாக்கும் வாலிபர் ... 13
6. கிராமிய தலைமை .. .. .. .. 19
7. சிறுவருக்கு விளையாட்டும் படிப்பும் .. 22


அட்டைப் படம்:

சுபிட்சமான எதிர்காலத்துக்கு வழிகாட்டும் "ஸ்ரீமாவோ புர" இளைஞர் கூட்டுப் பண்ணையில் நடக்கும் பணிகளில் ஒரு காட்சி.

அட்டைப் படம்: சாந்த விரசிங்க


OOTRU ORGANISATION
MARIAMMAN LANE.
THIRUNELVELY.
JAFFNA.
SRI LANKA.

OOTRU ORGANISATION OFFICE JAFFNA 12/11/84

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பனித் தோட்டங்கள் தேசியமயம்

— ஆரிய அபயசிங்க —

இலங்கையிலே ஏறக்குறைய நாற்பது இலட்சம் ஏக்கர் நிலம் பயிர்ச் செய்கைக்கு உட்பட்டுள்ளது. இதில், தேயிலை, றப்பர், தென்னை போன்ற நிலையான பயிர்கள் ஏறத்தாழ இருபத்திரண்டு இலட்சத்து எண்பத்தோராயிரம் ஏக்கர் நிலத்தில் விளைவிக்கப்பட்டுள்ளன. நெல்லும் ஏனைய காலபோகப் பயிர்களும் பத்தொன்பது இலட்சத்து நாற்பதாயிரம் ஏக்கரில் பயிரிடப்படுகின்றன. **1972** ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட காணி உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் ஐயாயிரத்து அறுநூறு குடும்பங்கள் ஏறக்குறைய **12** இலட்சம் ஏக்கர் நிலம் தங்களுக்குச் சொந்தமாக இருப்பதாகக் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குப் பிரகடனம் செய்திருந்தனர். சட்டப்படி அவர்கள் வைத்திருக்கக் கூடிய காணி நீங்கலாக ஐந்து இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரம் ஏக்கர் நிலம் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறு காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட நிலத்திலே இரண்டு இலட்சம் ஏக்கரில் எதுவுமே பயிரிட முடியாத; மூன்று இலட்சத்து முப்பத்து மூன்று ஆயிரம் ஏக்கர் நிலத்தில் தேயிலை, றப்பர், தென்னைபோன்ற நிரந்தரப்பயிர்கள் செய்கை பண்ணப்பட்டுள்ளன. ஒருவருக்குச் சொந்தமாக இருக்கக் கூடிய காணியின் உச்சவரம்பு ஐம்பது ஏக்கராகவும் வயற்காணி இருபத்தைந்து ஏக்கராகவும் நிர்ணயிக்கப்பட்டது. எனினும் இந்த நியதிக்கு, வரையறுக்கப்பட்ட ஸ்ரேலிங் கம்பனிகளோ இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ரூபா கம்பனிகளோ உட்படவில்லை. தனிப்பட்ட கம்பனிகளுக்கும் பொதுக் கம்பனிகளுக்கும் சொந்தமான, ஆனால் பயிர் செய்யப்படாத காணிகளே **1972** ஆம் ஆண்டின் **1** ஆம் இலக்க காணிச் சீர்திருத்தச் சட்டத்திற்கு உட்பட்டன. இந்நாட்டில் பயிர்ச்செய்கைக்கு உட்பட்டிருந்த **4,15,508** ஏக்கர் நிலம் பொதுக் கம்பனிகளுக்குச் சொந்தமாக இருந்தன. இதில், தேயிலை, றப்பர், தென்னை போன்ற பயிர்கள் விளைவிக்கப்பட்ட **2,01,979** ஏக்கர் காணி இலங்கைச்சட்டங்களுக்குக் கட்டுப்படாத ஸ்ரேலிங் கம்பனிகளுக்குச் சொந்தமாக இருந்தன. **1975** ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் இக்காணிகள் எல்லாம்தேசியமயமாகின்றன.

காணிச் சீர்திருத்தச் சட்டத்தின்படி இந்நாட்டிலுள்ள பெருந்தோட்டக்காணிகளை உடனடியாகத் தேசியமயமாக்குதலினால் இந்நாட்டு மக்களுக்கு என்ன நன்மை என்ற கேள்வி எழுவது இயல்பு. இந்த நாட்டில் மிக அமைதியான முறையில் குறுகியகாலத்தினுள் காணிச் சீர்திருத்தம் நடைபெற்றுள்ளது. இவ்வளவு அமைதியாக மற்ற நாடுகளில் காணிச் சீர்திருத்தம் நடைபெற்றதில்லை என அறிகிறோம். ரஷ்யா, மக்கள் சீனு, கிழக்கு ஐரோப்பிய நாடுகள், கியூபா போன்ற நாடுகளில் அமைதியான முறையில் காணிச் சீர்திருத்தம் இடம்பெறவில்லை. யுத்தத்திற்குப் பின்னர் யப்பானில் ஏழரை ஏக்கர் காணியே ஒருவருக்குச் சொந்தமாக இருக்கலாம் என மட்டுப்படுத்தப்பட்டது. காணி உச்சவரம்பு போலந்து தேசத்தில் **37** ஏக்கராகவும், எகிப்தில் **103** ஏக்கராகவும், செக்கோஸ்லாவாகியாவில் **124** ஏக்கராகவும் நிர்ணயிக்கப்பட்டது.

இந்நாட்டில் காணிச் சீர்திருத்தம் வருதற்குப் பின்னணியாகப் பல காரணங்கள் இருக்கின்றன. பணம் உள்ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையில் நிலவும் ஏற்றத் தாழ்வைக் குறைத்தற்காக எடுத்த நடவடிக்கைகளுள் ஒன்று காணிச்சீர்திருத்தமாகும். பெருந் தோட்டங்களுக்கு மத்தியில் அகப்பட்டுக் கமஞ்செய்து முன்னேறுவதற்கு வாய்ப்பு இல்லாதிருந்த கிராம மக்களின் நன்மைக்காக நடவடிக்கை எடுப்பதற்குக் காணிச் சீர்திருத்தச் சட்டம் துணை புரிந்தது. வேற்றுநாட்டவர்கள் பிரதான செல்வமான எங்கள் நிலத்தில் பயிரிட்டுக் கிடைத்த பொருள்வளத்தைக்கொண்டு தங்கள் நாட்டைச் செழிக்கச் செய்தனர். சமூக அமைப்பினுள் எல்லோருக்கும் வருமானம் நியாயமாகப் பங்கீடு ஆகுதற்கும் காணிச் சீர்திருத்தம் வகைசெய்கிறது. சுரண்டல், தோட்டத்துரை-தொழிலாளர் பேதம் போன்றவை காரணமாக மக்கள் தங்கள் ஆற்றலையும் செயற் திறனையும் வளர்த்துக்கொள்ள போதிய வாய்ப்புக்கிட்டவில்லை. பெருந்தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட பின்னர் இத்தகைய வாய்ப்பு மக்களுக்குக் கிட்டும் என எதிர்பார்க்கலாம். இது காலவரை ஒரு முறையான பயிர்ச்செய்கைத் திட்டத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றி தேயிலை, றப்பர், தென்னை போன்றவை பயிரிடப்படவில்லை. வயலுக்கு உகந்த இடங்களில் வர்த்தகப் பயிர் ஏதேனும் நாட்டப்பட்டது. காடுகள் வளர்க்க வேண்டிய இடங்களில் தேயிலை நாட்டப்பட்டது. இதனால் ஆறுகளின் தோற்றத்துக்கான நீரூற்றுக்கள் பாதிக்கப்பட்டன. நுவரெலியா, கம்பளை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் அதிக வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். இதற்கு நிலத்தை ஏற்ற முறையில் உபயோகிக்காததே காரணமாகும். இலங்கையில் பயிர்ச் செய்கைக்குரிய நிலத்திற் பெரும்பாகம் தேசியமயமானதும், திட்டமிட்டுப் பயிர்ச் செய்கையை விருத்தி செய்யலாம். வேலைவாய்ப்பைப் பெருக்குவதும், உற்பத்தியை அதிகரிப்பதும் காணிச் சீர்திருத்தத்தின் மற்றும் சில குறிக்கோள்களாகும். இவ்வளவு காலமும் நாட்டின் சமூக, பொருளாதார பலம் அனைத்தும் ஒரு சிலரது கையிலேயே திரண்டிருந்தது. அவர்களது பொருளாதார பலத்தின் அடித்தளம் நிலமாகவே இருந்தது. காணி உடைமை பரவலாக்கப்படும்போதும் தேசியமயமாக்கப்படும்போதும் இந்நிலை மறையத் தொடங்கும்.

இதுவரையில் கிராமங்களுக்கும் பெருந்தோட்டங்களுக்கும் இடையில் நிலவிய வித்தியாசங்கள் நீங்கி, அவை இரண்டும் ஒன்றுக மருவி, ஒரே சமூக அமைப்பாக விளங்குதற்கு வாய்ப்பு ஏற்படும். தக்கபடி நிலத்தைப் பயன்படுத்தித் திட்டவட்டமாக பயிர்ச்செய்கை அமைப்பை வகுப்பதன் மூலமும், செம்மையான முகாமை முறைகளைப் பரவற்படுத்துவதன் மூலமும் உற்பத்தியைப் பெருக்கி நாட்டுக்கு நன்மைகள் பல காணலாம். பெருந்தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட பின்னர் இந்நாட்டில் விளைவிக்கக்கூடிய பல பயிர்களைத் தீவிரமாகச் செய்கை பண்ணுவதன் வெளிநாட்டு நாணயமாகவும் பெருந்தொகையை மிகுதிப்படுத்தலாம்.

பெருந்தோட்டங்களில் இப்போதுள்ள சில வசதிகள் அயலில் வாழும் கிராம மக்களுக்கும், கிராமங்களில் காணப்படும் வசதிகள் தோட்டங்களில் வாழும் மக்களுக்கும் கிட்டுதற்கு இனிமேல் வகை செய்யப்படும். கிராமத்தின் மத்தியில் பெருந்தோட்டம் இருக்கும். ஆனால் இத்தோட்டத்தில் இடைக்கும் ஆதாயத்தைத் தோட்டச் சொந்தக்காரர்களே சுகித்துக் கொள்வார்கள்; கிராம முன்னேற்றத்துக்குப் பயன்படுத்தமாட்டார்கள். இந்நிலை, தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட பின்னர் மாறும். கிராம வளர்ச்சியில் அதிக கவனஞ்செலுத்தப்படும்.

பெருந்தோட்டங்களில் நிருவாகத்தினருக்கும் உழைப்பாளிகளுக்கும் இடையில் நிலவிய ஏற்றத்தாழ்வுகள் நாளடைவில் நீங்கிவிடும். பெருந்தோட்டங்களில் இடைக்கும் இலாபத்தில் ஒரு பாகம் தொழிலாளருக்கும் பிரித்துக்கொடுக்கப்படும்.

நிலத்தைத் தக்கபடி பயன்படுத்தி பொது மக்களின் ஒத்துழைப்புடன் உற்பத்தியைப் பெருக்குதற்கு முகாமைத்திறனும் அவசியம். அதனால் செல்வம் பேணப்பட்டு, நாட்டுக்கு நன்மை ஏற்படும். பெருந்தோட்டங்களில் உணவுப் பயிர்கள் விளைவிக்கக்கூடிய இடங்களில் அவை முறையாக விளைவிக்கப்படும். உணவுப் பொருட்களுக்காகச் செலவாகும் வெளிநாட்டு நாணயமும் மிகுதிப்படுத்தப்படும்.

இலங்கையில் தேசியமயமாக்கப்பட்ட நிலங்களைப் பற்றிய சில முக்கிய விபரங்களை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாக இருக்கும்.

| | |
|---|---|
| தேசியமயமாக்கப்பட்ட நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ள ஏக்கர் | 4,15,508 |
| இதில் தேயிலை பயிரிடப்பட்டுள்ள ஏக்கர் | 2,92,125 |
| றப்பர் பயிரிடப்பட்டுள்ள ஏக்கர் | 1,10,021 |
| தென்னை பயிரிடப்பட்டுள்ள ஏக்கர் | 8,036 |
| ஏலம், கறுவா, போன்ற பயிர்கள் | 5,000 |

தேயிலை, றப்பர், தென்னை ஆகியன பயிரிடப்பட்டுள்ள நிலம் யாவும் **396** பெருந்தோட்டங்களுள் அடங்கியது. இத்தோட்டங்கள் **232** பொதுக்கம்பனிகளுக்குச் சொந்தமாக இருந்தன. எண்பத்தேழு ஸ்ரேலிங் கம்பனிகள் **2,01,979** ஏக்கரைக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

191 தோட்டங்களை உடைமையாகக் கொண்டிருந்தன. 2,13,529 ஏக்கரைக்கொண்ட 205 தேயிலைத் தோட்டங்கள் 145 ரூபாக் கம்பனிகளுக்குச் சொந்தமாக இருந்தன. 8036 ஏக்கர் தென்னை பயிரிடப்பட்ட நிலத்தில் 2433 ஏக்கர் இரண்டு ஸ்ரேலிங் கம்பனிகளுக்குச் சொந்தமாக இருந்தது. மிகுதி ரூபாக் கம்பனிகள் நான்குக்குச் சொந்தமாக இருந்தது. இந்நாட்டில் ஆகக்கூடிய உற்பத்தியையும் அதிக உயர்ந்த பெறுமதியான தேயிலையையும் தரும் தோட்டங்கள் ஸ்ரேலிங் கம்பனிகளின் கையில் இருந்தன.

இந்நாட்டின் இரத்தினக்கல் அதிகம் காணப்படும் நிலத்தில் பெரும் பாகம் இக்கம்பனித் தோட்டங்கள் அமைந்துள்ள பகுதிகளுக்குள்ளேயே இருக்கின்றன. தோட்டங்கள் தேசியமயம் ஆக்கப்பட்டதனால் இரத்தினக்கல் காணப்படும் நிலத்தில் கிடைக்கும் இலாபம் இனிமேல் நாட்டுக்குச் சேரும். இத்தகைய நன்மைகளைப் பார்க்கும்போது 1975 ஆம் ஆண்டின் காணிச் சீர்திருத்த (திருத்தச்)சட்டம் இந்நாட்டுக்குப் பொருளாதார, சமூக, அரசியல், கலாச்சார ரீதியில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## மரவள்ளி 'பிபிங்கா' (BIBINKA)

பிலிப்பைன்ஸ் மக்கள் மரவள்ளிக் கிழங்கில் செய்யும் ஒரு சிற்றுண்டிக்கே பெயர் 'பிபிங்கா'.

பெயர் புதிதாக இருப்பதால், இதனை நாமும் வீட்டில் செய்து பார்ப்போமே என்ற ஆசை, குறிப்பாகப் பெண்களுக்கு ஏற்படுவது இயற்கை. இதோ விபரங்களைத் தருகிறோம்:

**தேவையானவை:**

2 முட்டை
¾ கிண்ணம் சீனி அல்லது கருப்பட்டி.
3 மேசைக்கரண்டி வெண்ணெய்-கலவைக்கு
½ கிண்ணம் தடித்த தேங்காய்ப்பால்
1 கிண்ணம் புதிய மரவள்ளிக்கிழங்குச்சீவல்
½ இளந் தேங்காய்த்துருவல்.
3 மேசைக் கரண்டி வெண்ணெய் மேற்தடவலுக்கு

**செய்முறை:**

1. முட்டைகளை அடித்து, அத்துடன் சீனி, வெண்ணெய், தேங்காய்ப்பால் ஆகியவற்றைச் சேர்த்து அடிக்கவும்.
2. இதனை ஊற்றி மரவள்ளிக் கிழங்குச் சீவலுடனும் இளந் தேங்காய்த்துருவலுடனும் கலக்கவும்.
3. தட்டு ஒன்றில் வாழை இலையைப் போட்டு, அதன்மீது கலவையை ஊற்றவும்.
4. மிதமான போறணையில் வைத்து வேகவைக்கவும்.
5. மண் நிறம் பெற்று வரும்போது வெண்ணெயைத் தடவி அதன்மீது சிறிது சீனியைத் தூவவும்.
6. பொன் நிறம் ஆகும் வரை வேகவைத்து, ஆறிய பின்னர் சாப்பிடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனுக்கு உதவும் பூச்சிகள்

**பூச்சிகளால் மனிதனுக்கு ஏற்படும் கேடுகளைப் பற்றியே அதிகமாக எழுதப்படுவதுண்டு. மனிதனுக்கு உதவும் பூச்சிகளும் அநேகம் இருக்கின்றன என்பதை நாங்கள் அவ்வளவாக உணர்வதில்லை. மனிதனுக்குப் பல்வேறு வழிகளிலும் உதவும் பூச்சிகள் பல உள்ளன. இவற்றை ஒவ்வொன்றாக இங்கு கவனிப்போம்.**

## பட்டுப் பூச்சி


ஆதிகாலம் தொட்டே பட்டுப்பூச்சி மக்களால் வளர்க்கப்பட்டுவருகிறது. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சீனாவிலேயே பட்டுப்பூச்சி வளர்க்கும் வழக்கம் முதலில் தொடங்கியதாகக் கருதப்படுகிறது. சீனாவில் ஆட்சிசெய்த சக்கரவர்த்தி **குவாங்-தூ** என்பவரின் மனைவி **லொட்சா** என்ற பெண்மணியே பட்டு நூலின் பயனைக்கண்டு பிடித்ததாகச் சொல்லுகிறார்கள். பட்டு நூல் இரகசியத்தை மற்றெவரும் அறியாது காப்பாற்றும் நோக்குடன், பட்டுப்பூச்சியின் முட்டைகளை சீனாவுக்கு வெளியே எடுத்துப் போவதைத் தடை செய்ததுடன் இத்தடையை மீறினால் மரணதண்டனை எனவும் விதித்திருந்தார்கள். ஆயினும் கி. பி. 555 ஆம் ஆண்டளவில் சீனாவுக்கு ஒற்றர்களாக அனுப்பப்பட்டிருந்த இரண்டு குருமார், பட்டு நூலின் இரகசியத்தை அறிந்து, நடுவில் துவாரம் உடைய கைத்தடியில் பட்டுப்பூச்சி முட்டைகளை மறைத்து வைத்துக்கொண்டு கொன்ஸ்தாந்திநோபிள் என்ற நகருக்கு எடுத்துச் சென்றார்கள். இதன் பின்னரே ஐரோப்பாவில் பட்டு நூல் உபயோகம் பரவத்தொடங்கியது. செயற்கை நூல் உபயோகம் இன்று பெரிதும் பரவியுள்ளபோதிலும், பட்டு நூலும் ஒரு தனி இடத்தை வகிக்கவே செய்கிறது.

பட்டுப்பூச்சி புழு நிலையில் இருக்கும் போது அதன் முட்டைகளை இடுதற்கு வாயிலிருந்து சுரக்கும் உமிழ்நீரை நூலாக்கிக் கூடு அமைக்கிறது. இதிலிருந்தே பட்டு நூல் கிடைக்கிறது. வளர்ச்சி அடைந்த பூச்சி வெள்ளை நிறமானது. இறகு விரித்த நிலையில் இரண்டு அங்குல குறுக்கு அளவை உடையது. அது அதிகம் பறப்பதில்லை, எதையுமே தின்பதில்லை. அப்பூச்சி இரண்டு அல்லது மூன்று நாட்கள் மாத்திரமே உயிர்வாழ்கிறது. எனினும் அதற்கிடையில் அது முசுக்கொட்டைச் செடியின் (மல்பெறி) இலைகளின் மீது 300-500 முட்டைகள் வரையில் இடுகிறது. (படம்1)



**பட்டுப் புழு**

முட்டையிலிருந்து வெளிவரும் பட்டுப் புழுக்கள் முசுக்கொட்டைச்செடியின் இலைகளைத் தின்கின்றன. 42 நாட் கால இடை



**பட்டுப் பூச்சி**

வெளியில் அது 90 கிராம் இலைகளைத் தின்கின்றது. பின்னர் அது உண்பதை நிறுத்தி விட்டு, அதன் வாயிலிருந்து ஊறும் நீரைக் கொண்டு ஆக்கும் தொடர்ச்சியான நூலினால் கூட்டைக் கட்டுகின்றது. இந்த நூலின் நீளம் வழமையாக 800-1000




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாராக இருக்கும். கூடு முற்றுப்பெறுதற்கு மூன்று நாட்கள் வரை செல்கிறது. பட்டுப் பூச்சி 10 - 16 நாட்களில் வளர்ச்சி அடைந்து சுற்றவுள்ள பட்டுநூலை அறுத்துக்கொண்டு



கூடு



கூட்டுப் புழு

வெளிவருகிறது. பட்டுப்பூச்சி வளர்ப்போர், இவ்வாறு நூல் அறுந்துபோகாது இருப்பதற்காக, புழு நிலையில் இருக்கும்போதே கூட்டை வெந்நீரிலிட்டு புழுவைக் கொல்கிறார்கள். பின்னர் கூட்டில் உள்ள பட்டு நூலைச் சுற்றி எடுத்து பட்டுப்புடவை நெய்கிறார்கள்.

## தேனீ

பூக்களில் தேன் கிடைக்கிறது. ஆயினும் எண்ணற்ற பூக்களில் மிக அற்ப அளவிலேயே தேன் இருப்பதால் அதனை மனிதன் பிற துணையின்றிச் சேகரித்தல் இயலாத காரியம். எனவே இந்த ஒப்பற்ற அமிர்தத்தைச் சேகரித்துத் தேனைத் தரும் தேனீ மனிதனுக்குப் பேருதவிபுரியும் பூச்சியாகும். ஓர் இறுத்தல் தேன் சேகரிப்பதற்கு ஒரு தேனீ நாற்பதாயிரத்திலிருந்து எண்பதாயிரம் தடவைகள் அதன் கூட்டிலிருந்து பூவை நாடிச் செல்ல வேண்டி இருப்பதுடன், அத்தனை எண்ணிக்கை மலர்



இராணி தேனீ



ஆண் தேனீ




தொழிலாளித் தேனீ

களையும் நாடவேண்டியுள்ளது. தேன் சேகரிக்கப்போகும் ஒவ்வொரு வேளையும் அது 1-1½ மைல்கள் தூரம் பறக்கிறது.

எனவே, ஒரு தேனீ ஓர் இறுத்தல்தேனைத் திரட்ட உலகை இரண்டுமுறை சுற்றிவரும் தூரத்தளவு பறக்க வேண்டியிருக்கிறது.

தேனீக்கள் தங்களின் சின்னஞ் சிறுசுகளுக்கு உணவு ஊட்டவேண்டும், கிட்டாத காலத்துக்காகச் சேர்த்து வைக்க வேண்டும் என்ற ஒருவித இயல் பூக்கத்தினால் உந்தப்பட்டு, கூட்டம் கூட்டமாக நாளுக்குநாள், பலதடவைகள் புறப்பட்டுச் சென்று துளிதுளியாகத் தங்கள் அருஞ் செல்வத்தை அவைகளே உருவாக்கிய மெழுகுக் களஞ்சியங்களில் சேர்த்து வைக்கின்றன.




தேன் வதை

பூந்தேன் தொழிலாளித் தேனீயின் வாயில் ஊறும் நீருடன் கலந்து விழுங்கப்பட்டு, 'தேன் உறையில்' நிரப்பப்பட்டு தேன் கூட்டுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. பின்னர் இது தேன் கூட்டின் மெழுகு அறையில் அடைக்கப்படுகிறது. எனினும் இதில் அதிக நீர்த்தன்மை இருப்பதால் தேக்கி வைத்தல் கஷ்டமாகக் காணப்படும். ஆகையால், தேன் சேகரிக்கப் போக இயலாதிருக்கும் இளம் தொழிலாளர் தேனீக்கள் நீர்த்தன்மையாக இருக்கும் தேனை இறுகச் செய்கின்றன. எவ்வாறு இறுகச் செய்கின்றன என்பது மற்றொரு விநோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம். இளம் தேனீக்கள் தங்கள் சிறிய சிறகுகளினால் விசிறி, மெழுகு அறையில் வைக்கப்பட்டுள்ள தேனை இறுக வைக்கின்றன. இவ்வாறு விசிறும்போது தேனில் கலந்துள்ள நீர்த்தன்மை உலர்ந்து விடுகிறது. விசிறும் அப்பியாசத்தினால் இளம் தேனீக்களின் சிறகுகளும் வலிவு பெறுகின்றன.

## மெழுகு

பொதுவாகப் பலர் நினைப்பதுபோல, பூக்களின் மகரந்தப் பொடியிலிருந்து மெழுகு கிடைப்பதில்லை. தொழிலாளித் தேனீயின் அடிவயிற்றில் காணப்படும் சுரப்பியிலிருந்து சுரக்கும் ஒருவகைத் திராவகம் படைபடையாக அமைப்புப் பெறுகிறது. இதனைக் கொண்டே தேன் கூடு கட்டப்படுகிறது. இந்த மெழுகைத் தான் மனிதன் எத்தனை பொருட்களில் உபயோகிக்கிறான், வாசனைப் பொருட்கள், சவரக் குழம்புகள், அச்சுக் காபன்பேப்பர், நிலத்திற்கு மெருகூட்டும் பொலிஷ் வகைகள்.

இவ்வாறு எத்தனையோ பூச்சிகள் மனிதனுக்கு நன்மை தருகின்றன. அவற்றைப்பற்றி அடுத்தடுத்த இதழ்களிலும் காண்போம்.

---

## ஏக்கர் ஒன்றில் 100 புசல் நெல் எப்படி விளைவிக்கலாம்?

ஐந்து முக்கிய விதிகளைக் கடைப்பிடித்தால் ஏக்கர் ஒன்றில் 100 புசல் நெல்லுக்குக் குறையாது விளைவிக்கலாம்.

ஐந்து விதிகளும் இவையே:

1. நல்ல இன விதை நெல்லைத் தெரிவு செய்தல்;
2. விதை நெல்லில் இருந்து கிருமித் தொற்றுக்களை அகற்றுதல்;
3. வயலுக்கு உரமிடுதல்;
4. வயலில் களை பிடுங்குதல்,
5. புழுப்பூச்சிகளையும், பயிர் நோய்களையும் கட்டுப்படுத்தல்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நிறுவகம் மேற்கொண்ட ஆராய்ச்சி பணிகள்

## விளைவு பெருக்கக் குழுவும் பயிர்ச்செய்கைக் குழுவும்

கம விளைவு பெருக்கக் குழுக்கள் நிறுவப்பட்டு இப்போது இரண்டு வருடங்களுக்கு மேல் ஆகின்றன. பயிர்ச் செய்கைக் குழுக்களும் இப்போது புதிதாக நாடு முழுவதிலும் அமைக்கப் பட்டுவருகின்றன. கமவிளைவு பெருக்கக் குழு, பயிர்ச் செய்கைக் குழு ஆகிய இரண்டைப்பற்றியும் ஆராய்வது உசிதமாக இருக்கும் என இந்நிறுவகத்திற்குத் தோன்றியது. நாடுமுழுவதிலும் நிறுவப்பட்டுள்ள இத்தகைய குழுக்களைப்பற்றி ஆராய்தல் சுலபமல்ல. கமத்தொழில் தொடர்பாக வேறுபட்ட சூழ்நிலைகளைக் கொண்ட ஏழு மாவட்டங்களில் ஏழு விளைவு பெருக்கக் குழுக்களையும் ஏழு பயிர்ச் செய்கைக் குழுக்களையும் தேர்ந்தெடுத்து, அவற்றின் செயல்முறைகளைப்பற்றி ஆராய்ந்து அறிதற்கு நிறுவகம் முயன்றது. குருநாகலை மாவட்டத்தில் வல்பல்ல, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மீகஸ்ஆற, கண்டிமாவட்டத்தில் கிராகம, யாழ்ப்பாண மாவட்டத்தில் புத்தூர், காலி மாவட்டத்தில் அளுத்வெல, அனுராதபுர மாவட்டத்தில் ராஜாங்கனை, கேகாலை மாவட்டத்தில் பெமினிவத்தை ஆகிய இடங்களிலுள்ள விளைவு பெருக்கக் குழுக்களும் அவற்றின் கீழ் உள்ள பயிர்ச் செய்கைக் குழுக்களும் தேர்ந்தெடுக்கப்பட்டன. பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிதலே நோக்கமாகும்.

*விளைவுபெருக்கக் குழு, பயிர்ச்செய்கைக் குழு ஆகியவற்றின் குறிக்கோள்களை கமக்காரர்கள் எவ்வளவிற்கு அறிந்துள்ளார்கள் என்பதும்;*

*இக்குழுக்களின் பணிகள்பற்றி கமக்காரர்கள் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்பதும், அவற்றின் பணிகளை மேம்படுத்த கமக்காரர்கள் யோசனை எதுவும் தெரிவிக்கிறார்களா என்பதும்;*

*கம விளைவுபெருக்கச் சட்டத்துக்கு இயைய விளைவுபெருக்கக் குழுக்களின் பணிகள் அமைந்துள்ளனவா என்பதும்;*

*விளைவு பெருக்கக் குழுவுக்கும் கமத்தொழிலை வளர்ப்பதற்காக உழைக்கும் உத்தியோகத்தருக்கும் இடையில் உள்ள தொடர்புகள் எப்படியானவை என்பதும்;*

*இக்குழுக்களுக்கு அவசியப்படும் பயிற்சிகள் என்ன என்பதுமாகும்.*

*ஆய்வு நடத்திய பகுதிகளில் நேரில் சந்தித்து நடத்திய விசாரணைகள் மூலம் கிடைத்த தகவல்களைப் பகுத்தறிந்த பின்னர், கமத்தொழிலை அபிவிருத்தி செய்ய இக்குழுக்களை எவ்வழியில் நன்கு பயன்படுத்த முடியும் என்பதை அறியக் கூடியதாக இருந்தது. இவற்றுள் பின்வரும் வழிமுறைகள் மிக முக்கியமானவை:*

- **கமத்துறையில் விளைவு பெருக்கக் குழு நிறுவப்பட்டு சில காலந்தான் ஆன போதிலும், இத்துறையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களும், கமக்காரர்களில் கணிசமான எண்ணிக்கையினரும் இக் குழுக்களைப்பற்றி அறிந்திருந்தனர்;**
- **இக்குழுக்களுக்கு இப்போது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைக்குப் பதிலாக, கமத்தொழிலையே தொழிலாகச் செய்வர்களைத் தேர்ந்தெடுப்பது நல்லதென்ற கருத்து கமக்காரர்களிடையே நிலவுகிறது. கமக்காரராக இருப்பதனால் பெற்ற அறிவு, அனுபவம், குறித்த பிரதேசத்தைப்பற்றி நன்கு தெரிந்திருத்தல் ஆகியன இக்குழுக்களில் அங்கம் வகித்துத் திறம்படக் கடமைபுரிதற்கு உறுதுணையாகின்றன;**
- **கமக்காரரிடையே கருத்துப் பரிமாற்றம் நடைபெறுதற்கேற்ற ஒரு மத்திய நிலையமாக விளைவு பெருக்கக்குழு விளங்க வேண்டும்;**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கமக்காரர்களுக்குத் தேவைப்படும் உரம், விதை பொருட்கள், பூச்சி, களை கொல்லி மருந்துகள் போன்றவற்றை வழங்குவதைப் போலவே கமநலம் தொடர்பான கருத்துக்களைக் கமக்காரரிடையே பரப்புதற்காக கமக்காரர்களுக்கான கூட்டம், கருத்தரங்கு, பயிற்சி நெறிகள், செய்முறைகள் போன்றவற்றை நடத்தவும் விளைவு பெருக்கக் குழுக்கள் அக்கறை காட்டுதல் வேண்டும்;

- விளைவுபெருக்கக் குழுவும் பயிர்ச் செய்கைக் குழுவும் கமக்காரருக்குத்தேவைப்படும் உரம், விதைபொருள் போன்றவற்றைப் பெற்றுக் கொடுப்பது மட்டுமல்லாது, பல்வேறு கமத்தொழில் அலுவல்களில் கமக்காரர்களையும் பங்குபற்றச் செய்தும், ஊக்கம் அளித்தும், அவரவர் பிரதேசத்தை அபிவிருத்தி செய்தற்கான புதிய செயல்முறைகளை அறிமுகப்படுத்தும் தாபனங்களாகவும் திகழவேண்டும். பிரதேசத்தின் அபிவிருத்திக்கு இக்குழுக்களே பெரிதும் பொறுப்பு வகிக்கின்றன என்பதை அதன் உறுப்பினர்களும் மனதிற் கொள்ள வேண்டும்;

- பிரதேச அபிவிருத்திக்கான திட்டங்களை வகுத்து நிறைவேற்றுவதற்கான ஆலோசனைகளைக் கொடுப்பதே அரச உத்தியோகத்தர்களின் பொறுப்பாக இருந்த போதிலும், அவர்களுடன் ஒத்துழைத்து அவ்வப்பிரதேசத்தின் முன்னேற்றத்தைக் கவனிப்பது கிராமிய நிறுவனங்களின் கடமையாகும்;

- குறித்த பிரதேசத்துக்குரிய சிறந்த உற்பத்தித் திட்டத்தைக் கிராமிய நிறுவனங்களின் உறுப்பினர்களைக் கொண்டு தயாரிக்கலாம்.

### கமத்தொழில் விரிவாக்கம், பயிற்சி, தகவற் தொடர்பு

*கமத்தொழில் அலுவல்களை மேம்படுத்துவதற்கு பயிர்ச் செய்கை தொடர்பான புதிய உத்திகள், புதியவிதை இனங்கள் பற்றிய தகவல்களை எல்லோரும் அறியச் செய்தல் வேண்டும். இத்தொடர்பில் விரிவாக்க உத்தியோகத்தர்கள், பயிற்சி, புதிய கருத்துக்களைப் பரப்பும் மார்க்கங்கள் ஆகியன அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.*

*கொழும்பு மாவட்டத்தின் 2 ஆம் தர தென்னங்காணிகளைப்பற்றி இந்நிறுவகம் நடத்திய ஆய்வின் ஓர் அம்சமாக இப்பகுதிகளின் கமத்தொழில் விரிவாக்கம், பயிற்சி, தகவற் தொடர்பு மார்க்கங்கள் ஆகியன பற்றியும் ஆராயப்பட்டது.*

*இத்தகைய தகவல்கள், கமத்தொழில் போதனாசிரியர்கள், விரிவாக்க ஊழியர்கள், சிறிய ஏற்றுமதிப் பயிர்த்திணைக்களம், தெங்குச் செய்கைச் சபை ஆகியவற்றைச் சேர்ந்த விரிவாக்க, அபிவிருத்தி ஊழியர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்டன. இவர்களை விட 117 கமக்காரர்களையும் தேர்ந்தெடுத்து, அவர்களும் விசாரிக்கப்பட்டனர். இந்த ஆய்வின் மூலம் புலப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:*

- கமத்தொழில் விரிவாக்கப் பணியில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தருக்கும் கமக்காரர்களுக்கும் இடையில் இப்போதிலும் பார்க்க அதிக நெருங்கிய தொடர்பு ஏற்பட வேண்டும்.

- கடன் எடுக்கும் முறைகளைப்பற்றிக் கமக்காரர்கள் அதிகம் அறியாதவர்களாக இருப்பதால், அவற்றைப் பற்றியும், கடனை எப்படி நன்கு பயன்படுத்துவது என்பது பற்றியும் அவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும்.

- இளம் கமக்காரர்கள் மேற்கொள்ளும் வேலைத்திட்டங்களில் கமக்காரர்களும் விரிவாக்க உத்தியோகத்தர்களும் அதிக அக்கறையுடன் பங்குபற்றுவதைக் காணக்கூடியதாக இருந்தது.

- விளைவு பெருக்கக் குழுக்களும் மற்றும் விரிவாக்கப் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களும் கமக்காரர்களுக்குத் தேவையான உரம், விதை பொருள் போன்றவற்றைக் கொடுக்க உதவுதற்கே உள்ளன எனக் கமக்காரர்கள் நினைக்கிறார்கள். அவை அவ்வப்பிரதேசத்துக்குரிய அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து நிறைவேற்றுதலிலும் முக்கிய பங்குவகிக்கின்றன என்பதையும் கமக்காரர்கள் அறியச் செய்தல் வேண்டும்.

- பாடசாலைகளில் கமத்தொழில் போதிக்கும் ஆசிரியர்களுக்கும் விரிவாக்க உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சி நெறிகளையும் செய்முறைகளையும் நடத்தினுல் இரு பிரிவினரும் பயன்பெறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் என்பது இந்த ஆய்விஞல் புலப்பட்டன.

கிராமங்களில் பணிபுரியும் பல்வேறு விரிவாக்க உத்தியோகத்தர்களின் நிலேயும் இந்த ஆய்வின்மூலம் தெரிய வந்தது. தென்னே, சிறு ஏற்றுமதிப் பயிர்கள், நெல் ஆகியவற்றின் விரிவாக்க உத்தியோகத்தர்களிடையே நெருங்கிய தொடர்பை வளர்ப்பதன் மூலம் கமக்காரர்களுக்கு மேலும் அதிக சேவையை வழங்க இயலும்.

இவ்விடய அம்சங்களேக்கொண்ட ஆராய்ச்சி முடிவுகள் பிரசுரமாக வெளியிடப்பட்டுள்ளது.

**இந்நிறுவகத்தின் மற்ருெரு முக்கிய ஆய்வு**

இதுவரையில் வேறு எந்தத் தாபனத்திஞலும் ஆராயப்படாத ஒரு துறையைப் பற்றியும் இந்நிறுவகம் ஆராய்ச்சி ஒன்றை மேற்கொண்டுள்ளது. சேனேப் பயிர்ச் செய்கைபற்றியதே இந்த ஆய்வாகும். அனுராதபுர மாவட்டத்தில் ஒரு பிரதேசத்தைத் தெரிந்தெடுத்து, அங்கு நடைபெறும் சேனேப் பயிர்ச்செய்கை பற்றியும், விளேவிக்கப்படும் பொருட்களேச் சந்தைப்படுத்துதல் பற்றியும், மேட்டுக்காணி, வயற்காணி ஆகியவற்றின் உடைமைபற்றியும் ஆராய்ந்து அப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்தற்குரிய திட்டத்தை வகுக்க நிறுவகம் எண்ணியுள்ளது. இவற்றைவிட, இப்போது விளேவிக்கப்படும் பயிர் இனங்களிலும் பார்க்க அதிக வருமானம் தரக்கூடிய வேறு பயிர்களேச் செய்கைபண்ண முடியுமா எனவும், மண்ணின் தன்மைக்கேற்ற பயிர்கள் விளேவிக்கப்படுகின்றனவா எனவும் ஆராய்ந்து முக்கிய முடிவுகளே வெளியிடவும் உத்தேசிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளைபொருட்களை விற்பதில் ஏற்படும் சிக்கல்கள்

## பி. ஜெ. குணவர்த்தன

கமக்காரன் தனது கமத்தில் விளையும் பொருட்களைச் சுலபமாகவும் நல்ல விலைக்கும் விற்பதற்கு ஏற்ற வசதிகள் இருப்பது பெரிதும் அவசியம். இத்தகைய வசதி இல்லாவிட்டால் கமக்காரன் தன் குடும்பத்துக்குப் போதியதை மாத்திரமே விளைவிக்க முற்படக்கூடும். விலைக்குக் கொடுக்கத் தக்கவாறு மேலதிகமாக விளைவிக்கும் கமக்காரன் எப்போதும் தன் விளைபொருட்களை விலைப்படுத்த வழிதேடுதல் இயற்கையே. விளைவிப்பவர்களிடமிருந்து உபயோகிப்பவர்களுக்கு விளைபொருட்கள் நேரடியாகக் கிடைக்க முடிந்தால் சந்தைப்படுத்துவதில் சிக்கல் ஏற்படாது. ஆயினும், நூற்றுக் கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் நுகர்வாளர்களுக்காக கமக்காரர் சில விளைபொருடகளை உற்பத்தி செய்கிறுர். இந்நிலையில் கமக்காரர்களுக்கும் நுகர்வாளர்களுக்கும் இடையில் இருப்பவர்களான வியாபாரிகளின் சேவை அவசியமாகிறது. கம விளைபொருடகளை சந்தைக்கு எடுத்துச் சென்று, அவற்றை நுகர்வாளர்களுக்கு விற்பனை செய்தல் வியாபாரிகளது தொழில். இப்படிப்பட்ட விளைபொருள் விற்பனையை எங்கள் நாட்டில் தனிப்பட்ட வியாபாரிகளுட், அரசின் கீழ் இயங்கும் சந்தைப்படுத்தும் திணைக்களமும், விளைபொருட் - கூட்டுறவுச் சங்கங்களும் கவனிக்கின்றனர்.

சந்தைப்படுத்தும் அலுவல் எனனமுறையில் நடந்தபோதிலும், கமக்காரர்களது விளைபொருட்களுக்கு ஆகக்கூடிய நியாயமான விலை கிட்டுவதும், நுகர்வாளர்கள் மிக நியாயமான விலைக்கு அவற்றை வாங்கக்கூடியதாக இருப்பதுமே பெரிதும் முக்கியமான விஷயம். கமக்காரனிடமிருந்து விளைபொருட்கள் நுகர்வாளரைப்போய்ச் சேரும் வரை ஏற்படும் பலவித அலுவல்களுக்குச் செலவுகள் உண்டாகின்றன. விளைபொருட்களை ஒன்று திரட்டுதல், எடுத்துச் செல்லுதல், சேகரித்துப் பேணிவைத்தல், தெரிவு செய்து வகைப்படுத்தல் ஆகியன அப்படிப்பட்ட அலுவல்களிற் சிலவாகும். நுகர்வாளர் விளைபொருடகளுக்கு விலை செலுத்தி வாங்கும்போது, அப்பொருட்களுக்கு மாத்திரமின்றி அவற்றை அந்நிலையில் கிடைக்கச் செய்தற்கு ஏற்படும் செலவையும் சேர்த்தே செலுத்துகிறுர்கள்.

இக்காரணத்திஞல் இத்தகைய செலவுகளைக் குறைத்து முடிந்தவரையில் வியாபாரிகள் தங்கள் ஆதாயத்தைக் கூடுதலாகப் பெறுதற்கே முயற்சிப்பார்கள். கமக்காரர்களிடம் இருந்து ஆகக் குறைந்த விலைக்கு இவ்விளைபொருட்களைப் பெற முடிந்தால், வியாபாரிகள் தங்கள் ஆதாயத்தையும் கூடுதலாகப் பெறமுடியும். தங்கள் விளைபொருட்களை நல்ல விலைக்கு வேறு வழிகளில் விற்கக் கமக்காரர்களுக்கு வாய்ப்பு இல்லாவிட்டால் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு எந்த விலைக்கேனும் அவற்றைக் கொடுக்கிறுர்கள். இவர்களைத் தவிர சந்தைப்படுத்தும் திணைக்களம், விளைபொருட் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவையும் கமக்காரர்களது விளைபொருட்களை வாங்குகின்றன. எனினும் தனிப்பட்ட வியாபாரிகளைப் போன்று இவை சக்தி வாய்ந்தனவாக இல்லாவிட்டால், அவற்றுலும் நன்மை தனிப்பட்ட வியாபாரிகளுக்கே ஏற்படும்.

கொழும்பு மாவட்டத்தில் தென்னை வளரும் பகுதிகளில் விளைபொருட்கள் சந்தைப்படுத்தல் பற்றி ஓர் ஆராய்ச்சியை கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் அண்மையில் மேற்கொண்டது. இப்பகுதிகளில் விளையும் மரவள்ளி, இஞ்சி, கொடித்தோடை, அன்னுசி போன்றவற்றைச் சந்தைப்படுத்துவதில் கமக்காரர்களுக்கு உள்ள சிக்கல்கள் பற்றியே ஆராயப்பட்டது.



OOTRU ORGANISATION
MARIAMMAN LANE,
THIRUNELVELY,
JAFFNA.
SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய விளைபொருட்கள் சீக்கிரத்தில் கெட்டுப்போகக் கூடியன. எனவே இவற்றை அறுவடை செய்ததும், விளைபொருட்களை விற்பனை செய்வது மிக முக்கியம். இந்நிலையில் எந்த விலைக்கோ, அப்படியே தொகையாக வாங்க வருபவருக்கு அவற்றை விற்கக் கமக்காரர்கள் முற்படுகிறார்கள்.

சிலமாதங்களுக்கு முன்னர் மரவள்ளிக் கிழங்குக்கு இருந்த கிராக்கி வீழ்ச்சி அடைந்ததுடன் அதன் விலையும் குறையத் தொடங்கியது. அரிசி, மா போன்றவற்றின் பங்கீட்டு அளவு குறைக்கப்பட்டதனாலும், அவற்றின் விலை அதிகரித்தமையாலும் மரவள்ளி போன்றகிழங்கு வகைகளின் விலை உச்சமாக இருந்தது. அண்மையில் அரிசி,மா போன்ற பொருட்கள் சுலபமாக எங்கும் வாங்கக் கூடிய நிலை ஏற்பட்டதும் கிழங்குவகைகளின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. மரவள்ளியின் விலை இறுத்தல் 20 சதமாகவும் குறைந்துவிட்டது. இதனால் சில கமக்காரர்கள் மரவள்ளியையே பிடுங்காது விட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக்காரணத்தினால் மரவள்ளியில் ஆதாயம் பெறக்கூடிய வேறு வழிகளைக் காணவேண்டியுள்ளது. மரவள்ளிக்கிழங்கை மிருகங்களின் உணவு தயாரிப்பதற்கும், பசை தயாரிப்பதற்கும் பயன்படுத்தலாம். அதனைப்பற்றி சந்தைப்படுத்தற்திணைக்களம் எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனம், மா ஆலைக் கூட்டுத்தாபனம் ஆகியன கலந்து யோசித்து ஒரு வழிகாணுதல் நல்லதெனக் கமக்காரர் கருதுகிறார்கள்.

இந்நாட்டில் விளையும் இஞ்சியைச் சந்தைப்படுத்துவதிலும் சிக்கல் தோன்றி உள்ளது. மக்கள் வீட்டில் சில தேவைகளுக்கும் மருந்துகள் சிலவற்றுக்குமே இஞ்சி பாவிக்கப்படுகின்றது. சென்ற வருடத்தில் இஞ்சிக்கு சந்தைப்படுத்தற் திணைக்களம் இறுத்தலுக்கு 60 சதத்திலிருந்து 75 சதம் வரை விலையாகச் செலுத்தியுள்ளது. இஞ்சிப் பயிர்ச் செய்கை அதிகரித்தமைக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். அதிகரித்துள்ள இஞ்சி விளைவிப்பினால் கமக்காரர்கள் பலன் பெறுதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விளையும் இஞ்சியை சந்தைப்படுத்தும் திணைக்களம் அப்படியே வாங்கி தேவைப்படுபவர்களுக்கு விற்கலாம் என்ற கருத்து கமக்காரரிடையே நிலவுகிறது.

சந்தைப்படுத்தும் திணைக்களம் தனக்குத் தேவையான அளவிற்குக் கொடித்தோடையைக் கமக்காரர்களிடமிருந்து வாங்கிய போதிலும், அதிலும் சில சிக்கல்கள் இருக்கவே செய்கின்றன. தனிப்பட்ட வியாபாரிகள் இப்போது கொடித்தோடையை அதிகம் வாங்குவதில்லை. சீனி விலை அதிகரித்தமை இதற்கு ஒரு காரணம் எனச் சொல்லப்படுகிறது. இதனால் கொடித்தோடையின் கிராக்கியும் குறைந்து வருகிறது.

அன்னாசியை விற்பனை செய்வதில் அதிகம் கஷ்டம் இல்லை என்றே கமக்காரர்கள் கூறுகிறார்கள். தனிப்பட்ட வியாபாரிகள் தங்களுக்கு வேண்டிய அளவை விலைக்கு வாங்குகிறார்கள். அவ்வாறே சந்தைப்படுத்தும் திணைக்களமும் வாங்குகிறது. சாற்றுக்காக, 'கீவ்' இன அன்னாசியைச்சந்தைப்படுத்தற் திணைக்களம் வாங்குகையில், 'மொறிஷஸ்' இன அன்னாசியை அநேகமாக தனிப்பட்ட வியாபாரிகளே வாங்குகிறார்கள்.

இப்பகுதிகளில் சந்தைப்படுத்துவதில் ஈடுபடும் நிறுவனங்கள் எவ்வளவிற்குத் திறம்பட இயங்குகின்றன என்பதையும் அறிய முனைந்தோம். திவுலப்பிட்டிய, மீரிகம, நித்தம்புவ ஆகிய பகுதிகளில் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு அடுத்தாற்போல் சந்தைப்படுத்தும் திணைக்களமே கமவிளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதில் திறம்பட ஈடுபடுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் அவ்வளவு தீவிரமாகச் சந்தைப்படுத்தற் பணியில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை.

சந்தைப்படுத்தற் திணைக்களம் மினுவங்கொடையிலும் அத்தனகலையிலும் இரண்டு கொள்வனவு நிலையங்களை நிறுவியுள்ளது. இந்நிலையங்களுக்குக் கமக்காரர் கொண்டுவரும் விளைபொருட்களைக் கொள்வனவு செய்தல், அப்பிரதேசத்தில் உள்ள சந்தைகளுக்குச் சென்று பொருட்களை வாங்குதல், சந்தைப்படுத்தற் திணைக்களத்துக்குச் சொந்தமான லொறிகள் கமக்காரர்களிடம் சென்று அவர்களது விளைபொருட்களை வாங்கிச் சேகரித்தல் ஆகியன சந்தைப்படுத்தும் திணைக்களம் மேற்கொள்ளும் பணிகள் ஆகும். இப்பிரதேசத்தில் இடைக்கும் விளைபொருட்கள் அனைத்தையும் வாங்குவதற்கு இங்குள்ள இரு கொள்வனவு நிலையங்களும் போதாதிருப்பதால், தனிப்பட்ட வியாபாரிகளே பெருமளவை வாங்குகிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கருத்தும் நிலவுகிறது. மற்றெரு சிக்கலும் உண்டு. அதாவது சந்தைப் படுத்தற் திணைக்களத்தின் கொள்வனவு நிலையங்கள் வாரத்தில் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களே கமக்காரர்களிடமிருந்து விளை பொருட்களை வாங்குகின்றன. குறித்த இந் நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் சேகரிக்கப்படும் விளைபொருட்கள் இரண்டொரு நாட்களுக்குமேல் வைக்கப் படமுடியாதவை என்ருல், அவற்றைக் கமக்காரர்கள் உடனே தனிப்பட்ட வியாபாரிகளுக்கே விற்கவேண்டி ஏற்படுகிறது.

சந்தைப்படுத்தற் திணைக்களம் விளை பொருட்களைத் தரம்பிரித்து, அவற்றுக்கு ஏற்றவாறே விலை செலுத்தி வாங்குகிறது. தனிப்பட்ட வியாபாரிகளோ தரம் பிரிக்காது அப்படியே தொகையாகக் கமக்காரர்களிடம் வாங்கிவிடுவார்கள். பொருட்களைத் தரம் பிரித்துக் கொடுப்பதனுல் தான் அதிக நன்மை கமக்காரர்களுக்குக்கிட்டும் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

கமக்காரர்கள் தங்கள் விளைபொருட்களை பயிர்ச் செய்கைக் குழுக்கள், கமவிளைவு பெருக்கக் குழுக்கள் ஆகியவற்றின் ஊடாக சந்தைப்படுத்தற் திணைக்களத்திற்கு விற்பனை செய்யலாம்.

கமக்காரர்களுக்குள்ள சந்தைப்படுத்தற் சிக்கல்கள் தீர அவர்களும், சந்தைப்படுத்தற் திணைக்களத்தின் ஊழியர்களும் பயிர்ச் செய்கைக் குழுக்களினதும் விளைவு பெருக்கக் குழுக்களினதும் உறுப்பினர்களும் பரஸ்பரம் ஒத்துழைப்பது அவசியம். இதனுல் குறிப்பாகக் கமக்காரர்களுக்கும் பொதுவாக நாட்டுக்கும் நன்மையே ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனத்தை வளமாக்கும் வாலிபர்

**வரண்ட நிலம் - வானம் பார்த்த பூமி. பெரும் போகத்தில் சிறிது மழையைப் பெற்றுக்கொண்டு வன விலங்குகளின் உறைவிடமாக இருந்த நிலம் இப்போது வாலிபர்கள் சிந்தும் வேர்வையினால், மேற்கொள்ளும் முயற்சியினால், காட்டும் ஊக்கத்தினால் வளம் பெற்றுப் பூத்துக்குலுங்கத் தொடங்கிவிட்டது.**

ஓரளவிற்குப் படித்திருந்தும், உத்தியோகம் எதுவும் பார்க்கும் வாய்ப்பில்லாது போனதும், சுதந்திரமாகவும் தன்னிஷ்டத்துடனும் கமஞ்செய்து தங்கள் வாழ்க்கைக்கு வழி தேடிக்கொள்வதற்கு 'சிறிமாவோபுர' கூட்டுறவுப் பண்ணை எறக்குறைய 750 யுவர்களுக்கும் 250 யுவதிகளுக்கும் வாய்ப்பளித்துள்ளது. இவர்கள் 45 தேர்தல் தொகுதிகளிலிருந்து வந்துள்ளனர். பரந்து கிடக்கும் இரண்டாயிரம் எக்கர் நிலம் இப்பண்ணைக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஆயிரம் எக்கர் காட்டுநிலத்தை கூட்டுறவு அடிப்படையில் இளைஞர்கள் பாடுபட்டு உழைத்துச் செம்மைப்படுத்தியுள்ளனர். கவனிப்பார் இல்லாது வரண்டு வனமாகக் கிடந்த நிலத்திலே இன்று நெல், வெங்காயம், மிளகாய், தக்காளி போன்ற பலதரப்பட்ட பயிர்கள் ஆங்காங்கே பயிரிடப்பட்டுள்ளதைப் பார்க்கும்போது மனம் குளிர்கிறது. ஒரே வீட்டுப் பிள்ளைகளைப்போல இத்தனை இளைஞர்களும் ஒற்றுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் இக்கூட்டுறவுப் பண்ணையில் உழைக்கிறார்கள். இது எனைய கூட்டுறவுப் பண்ணைகளுக்கும் முன்மாதிரியாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை. (படம் 1)

இப்பண்ணையில் நாலு பெரிய முகாம்கள் இருக்கின்றன. இவற்றுள் ஒன்று யுவதிகளுக்கெனத் தனியாக உள்ளது. ஒவ்வொரு முகாமிலும் எறக்குறைய 250 பேர் உறுப்பினராக உள்ளனர். ஒவ்வொரு முகாமைச் சேர்ந்தவர்களும் 500 எக்கர் நிலத்தைக் கூட்டுறவு முறையில் விருத்தி செய்கிறார்கள். ஒவ்வொரு முகாமுக்கும் ஒரு கூட்டுறவுச் சங்கம் உள்ளது. இதில் அந்தந்த முகாமைச் சேர்ந்தவர்கள் உறுப்பினராக இருப்பதுடன் அவர்களுள் நாலு அல்லது ஐந்து பேர் கூட்டுறவுச் சங்க இயக்குநர்களாகவும் பணிபுரிகின்றனர். உறுப்பினர்களது அன்றாட தேவைகளுக்காக ஒவ்வொருவருக்கும் ஒரு சிறுதொகை பணம் கொடுக்கப்படுகிறது. அவர்களது உழைப்பினால் கிடைக்கும் விளைபொருட்கள் கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிற்பனையாகின்றன. கூட்டுறவுச் சங்கத்தின் நிகர இலாபம் உறுப்பினர்களிடையே அவரவர் வேலைசெய்த நாட்களுக்கு எற்பக் கிடைக்கிறது. (படம் 2-பண்டகசாலை)

இங்குள்ள நாலு முகாம்களில் 'சுநேத்திர' முகாம் என்பது பெண்களுக்கு உரிய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாகும். **1974** செத்தெம்பர் மாதத்தில் நிறுவப்பட்ட இம்முகாமைச் சேர்ந்த யுவதிகள் பெரும்போகத்தின்போது கமஞ்செய்தற்கு ஆயத்தஞ் செய்துகொண்டிருக்கிறார்கள். நிலத்தைப் பண்படுத்துதல் தொடக்கம் விளைபொருட்களை விற்பனைக்கு அனுப்புதல் வரையிலுள்ள எல்லாவிதமான வேலைகளையும் இந்த யுவதிகள் அலுப்புச் சலிப்பின்றி உற்சாகத்துடன் செய்கிறார்கள்.

இவ்விளைஞர்கள் எல்லோரும் பொது விடுதியில் தங்கி, அவர்கள் உணவை அவர்களே சமைத்து உண்டு, கூட்டுணர்வுடன் உழைத்துத் தங்களின் எதிர்காலத்தையும் நாட்டின் நிலையையும் உயர்த்த அயராது பாடுபடுகின்றார்கள். (படம் 3) போன பெரும்போகத்தின் போது யுவதிகளது முகாமுக்குரிய நிலத்தில் நெல், மிளகாய், சோளம்; இலங்கைச்சட்டருட்டு, பயறு போன்ற தானியங்களை விளைவித்தார்கள். பயிர்ச்செய்கையுடன் மிருக வளர்ப்பிலும் யுவதிகள் கவனஞ் செலுத்தத் தொடங்கியுள்ளனர். இதற்கு முன்னோடியாக இப்போது அவர்கள் பன்றி வளர்க்கத் தொடங்கியுள்ளார்கள். மிருக வளர்ப்பைத் தீவிரப்படுத்த வேண்டும் என்பது அவர்களது குறிக்கோள்களுள் ஒன்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி லீலாவதி அபேவீர, சுனேத்திர முகாம் கூட்டுறவுச் சங்கத்தின் உப தலைவியாகக் கடமை பார்ப்பதனால் கூட்டுறவுச் சங்கத்தின் பண நிலைமையைப்பற்றி ஓரளவுக்கு எங்களுக்கு எடுத்துக்கூறினார். அவர் இந்த முகாம் அமைக்கப்பட்ட காலத்திலிருந்தே இப்பண்ணையில் பணிபுரிந்து வருகிறார். அவரது முகாமினது கூட்டுறவுச் சங்கத்தின் நிலையான வைப்புக் கணக்கில் இருபதினாயிரம் ரூபாயும், அதே போன்ற தொகை நடப்புக் கணக்கிலும் இருப்பதாகத் தெரிவித்தார். தங்களது கூட்டுறவுப் பண்ணை படிப்படியாக முன்னேறி வருதலை உணர்ந்துள்ள உறுப்பினர்கள் இப்போது தங்கள் பணிகளில் அதிக அக்கறைகாட்டி வருவதாகவும் லீலாவதி குறிப்பிட்டார். போன புதுவருடத்தின்போது உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் **250** ரூபா வீதம் முற்பணம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

துக்கு யுவதிகள் போகிறார்கள். பெண்களும் கமச்செய்கையில் இத்தனை ஆர்வம் காட்டுதல் எதிர்காலம் சிறப்பாக அமையும் என்பதற்கு ஓர் அறிகுறியேயாகும். (படம் **6** ட்றக்ரரில் செல்லும் கன்னியர்).

கூட்டுப் பண்ணையில் நிலவும் சில குறைபாடுகளைப்பற்றியும் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். தண்ணீர், சட்டப்பாடு, விடுதி வசதிகள் போதியளவு இல்லாதமை ஆகியன அவர்கள் குறிப்பிட்டவற்றில் முக்கியமானவை. தாய் தகப்பன், சகோதரர்கள், உற்றார் சுற்றத்தினர் எல்லோரையும் பிரிந்து காட்டு விலங்குகள் வாழும் ஒரு பிரதேசத்தில் வந்து குடியிருந்து வரண்ட பூமியை வளமாக்கத் துடித்துக்கொண்டிருக்கும் இவ்விளம் பெண்களை நாட்டின் வீராங்கனைகள் என்றே சொல்ல வேண்டும்.

'சாரபூமி' 'சமகி' 'கைமுனு' என்ற பெயர்களைக்கொண்ட ஆண்களுக்குரிய முகாம்களும்



**பன்றிப் பட்டி**


ஞாயிற்றுக்கிழமைகளையும் பொது விடுமுறை தினங்களையும்விட ஏனைய நாட்களில் அதிகாலை ஐந்து மணியிலிருந்து இரவு 9.30 மணிக்குப் படுக்கைக்குப் போகும் வரை பண்ணையில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள வேலைகளிலேயே ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு தலைவியின் கீழ் பத்துப்பேர் குழுக்களாகப் பிரிந்து செயற்படுகின்றனர். தோளில் மண்வெட்டியைச் சுமந்து கொண்டு கால் நடையிலோ ட்றக்ரர்களிலோ உற்சாகத்துடன் கமநிலத்

இவ்வாறே ஊக்கத்துடன் இயங்கிவருகின்றன. காலை **6** மணிக்கு ஒவ்வொரு முகாமைச் சேர்ந்தவர்களும் ஓரிடத்தில் கூடி அன்றும் அடுத்த நாளும் செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றிப் பேசிமுடிவு செய்து கொள்கிறார்கள்.

நான்கு முகாம்களுக்கும் பொதுவான பயிர்ச்செய்கைத் திட்டம் வகுக்கப்பட்டுள்ள போதிலும் அதனுடன் மிருக வளர்ப்புப் போன்ற அலுவல்களையும் பண்ணை உறுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



னர்கள் மேற்கொள்கிறார்கள். வான்கோழி, தாரா போன்றவற்றை வளர்ப்பதைப் பெருமளவில் மேற்கொள்வதற்கு முன்னதாக, பரீட்சார்த்தமாக அவற்றைச்சிறிய அளவில் வளர்க்கத் தொடங்கியுள்ளார்கள். (படம் 5 தாராக்கூட்டம்) எப்போதும் பயிர்ச்செய்கைத் தொழிலில் எறக்குறைய ஒரேவிதமான அனுபவத்தைப் பெறும் உறுப்பினர்கள், மிருக வளர்ப்பின்மூலம் வேறு விதமான அனுபவம் பெறுதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. நாளடைவில் அவர்கள் பாற்பசுக்களை வளர்ப்பதற்கும் நினைத்திருக்கிறார்கள்.

'சாரபூமி' முகாமின் குழுக்களில் ஒன்றுக்குத் தலைமை தாங்கும் திரு. கே. டபிள்யூ. ஏ. தனபால என்பவரை நாங்கள் சந்தித்துப் பேசினோம். அவரும் அவரது தோழர்களும் அன்று தகிக்கும் வெய்யிலில் அவர்கள் பாடுபட்டு விளைவித்த நெல்வயலில் வேர்வை சிந்த அறுவடை செய்துகொண்டிருந்தார்கள். ஏதோ நல்ல அனுபவம் பெற்ற கமக்காரர்கள் போன்று இந்த இளைஞர்களும் அறுவடை செய்த நெற்கதிர்களை கையினால் சேர்த்து தோள்மேல் சுமத்து வந்து சூடு அடுக்கிக் கொண்டிருந்தார்கள். ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ள தனபால அவர்கள் பெந்தறை, எல்பிட்டிய தேர்தல் தொகுதியிலிருந்து இக்கூட்டுறவுப் பண்ணைக்கு வந்துள்ளார். அவர் இப்பண்ணையில் கடந்த ஒருவருடமாக உழைத்து வருகிறார். தங்களின்பண்ணை வளர்ச்சிக்குச் சாதக பாதகமான காரணங்களை அவர் விளக்கிச் சொன்னார். சாரபூமி முகாமுக்குரிய கூட்டுறவுச் சங்கத்திற்கு ஐந்துபேர் இயக்குநராக இருப்பதாகவும், இதுவரையில் அச்சங்கத்தில் தொண்ணூறாயிரம் ரூபா ஆதாயம் திரண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். கூட்டுறவு முறையில் உழைப்பதன் மூலம் உற்பத்தியைப் பெருக்குவதற்கு விசாலமான நிலத்தில் பயிர்செய்தல் நன்மையாக இருக்கும் என்பது அவர் கருத்து. தங்கள் பண்ணையின் எதிர்காலத்தைப்பற்றி நிச்சயமற்றநிலை உறுப்பினர்கள் மனதில் நிலவுவதாகவும், இதனைப் போக்குதல் அவசியம் எனவும் அவர் கூறினார். இப்படியான நிச்சயமின்மையைப் போக்குதற்கு முதற்படியாக, பண்ணைக்குக் கிடைத்துள்ள ஆதாயத்தைப்பிரித்து உறுப்பினர்கள் எல்லோருக்கும் வழங்குவது நல்லது எனக் குழுவில் உள்ளவர்கள் ஒத்தபடி சொன்னார்கள்.

கூட்டுறவு முறைப்படி பயிர் செய்யும் முயற்சியைப்பற்றி இன்னும் சரியாக உறுப்பினர்கள் விளங்கிக்கொள்ளாதிருப்பதால், அவர்களது நம்பிக்கையும் உறுதியும் குலையாதவகையில் பண்ணை இயங்க வேண்டியது அவசியம் என தனபால தெரிவித்தார். புது உறுப்பினர்களைச் சேர்க்கும்போது கூட்டுறவுக் கருத்தை ஒப்புக்கொண்டு அதற்கமையப் பாடுபடக்கூடியவர்களைத் தேர்ந்தெடுப்பதே பண்ணையின் எதிர்கால வளர்ச்சிக்கு நன்மையாக இருக்கும் என பல உறுப்பினர்களும் சொன்னார்கள். கடும் வெய்யிலில் கஷ்டப்பட்டு உழைத்த அந்த இளைஞர்களின் முகம் கறுத்தபோதிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை உழைப்பினுல் பூரித்த வெள்ளை மனம் படைத்தவர்களாகவும், எதிர்காலத் திற்கு நல்வழி காட்டும் சுடர் ஒளிகளாகவும்



*அவர்களது பண்ணை அமைந்துள்ள பிர தேசத்தில் கடும் காற்று வீசிக்கொண்டிருக் கிறது. இதனுல் இவ்விளைஞர்களது விடுதிகள் அடிக்கடி சேதமடைகின்றன. இத்தகைய விடுதிகளைத் திருத்தி நன்னிலைப்படுத்துவது அவசியமாகும். (படம் 10 கூட்டுறவுப்பண்ணை உறுப்பினர் தங்கும் விடுதிகள்)*

**கூட்டுறவின் சிறப்பை உணர்வதற்காக ஒன் ருக வாழ்ந்து உழைத்திடும் வாலிபர்கள் பண்ணையைச் சூழவுள்ள கிராமத்தவர்களு டன் எத்தகைய உறவு வைத்துள்ளார்கள் என்பதை அறிய முனைந்தோம். கிராம மக்களுக்குச் சொந்தமான மாடுகள் தங் கள் பண்ணைப் பயிர்களை வந்து அழிப்பத ளுல் அவர்களது நல்லுறவுக்குச் சிலசம யங்களில் இடையூறு ஏற்பட்ட போதிலும் கிராம மக்களுக்கும் தங்களுக்கும் இடையில் யில் எப்போதுமே உறவு நல்லாகவே இருப் பதாக உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அண்மையில் 'கச்சிகல்லாற' என்ற கிராமத் தின் வீடு ஒன்றில் நெருப்புப் பிடித்து விட்டதனையும், வீட்டினுள் மூன்று சிறுவர் கள் அகப்பட்டு இறந்துவிட்ட மிகப் பரிதாப மான சம்பவத்தையும் எடுத்துச் சொன்னுர் கள். சிறிமாவோபுர கூட்டுறவுப் பண்ணை இளைஞர்கள். துடித்துக்கொண்டு பலவகை யான உதவிகளையும் துன்புற்ற அக்குடும்பத் துக்குச் செய்ததுடன் நிதி ஒன்று திரட்டியும் உதவினுர்களாம். கிராம மக்களும் தேவைப் பட்டபோது அறுவடை போன்ற வேலைகளில் பங்குபற்றி இளைஞர்களுக்கு உதவி செய் வார்களாம்.**

இக்கூட்டுறவுப் பண்ணையின் அலுவல்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து முகாமைப் படுத்தும் திரு. காலிங்க முதலிகே அவர் களையும் சந்தித்தோம். இப்பண்ணையில் ஏற் பட்டுள்ள வெற்றிகளுக்கும் சிக்கல்களுக்கும் அடிப்படையாகவுள்ள காரணங்களை காலிங்க முதலிகே அவர்கள் அனுபவத்துடன் கூடிய அறிவுடன் விளங்கப்படுத்தினுர். போனபெரும் போகத்தின்போது தங்களின் பண்ணையில் மக்காச்சோளம், சோளம், மிளகாய் பயறு, நிலக்கடலை, நெல், இலங்கைப் பருப்பு, குரக்கன் போன்றவற்றை விளைவித்து விற்ற தன் மூலம் ஏறக்குறைய மூன்று இலட்சம் ரூபாவரையில் இலாபம் கிடைத்திருப்பதாகத் தெரிவித்தார். இதனை உறுப்பினர்களிடை யே பிரித்துக் கொடுக்கும்போது ஏறக் குறைய ஒருவருக்கு இருநூறு ரூபாவரை யில் கிடைக்கக்கூடும் எனவும் சொன்னுர். கூட்டுறவுச்சங்கங்களின் கணக்குகள் கூட்டுற வுத் திணைக்களத்தினரால் பரிசோதிக்கப் பட்ட பின்னரே இலாபம் உறுப்பினர் களிடையே பிரித்துக்கொடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவின் சிறப்பை உறுப்பினர்கள் வேகமாக அறிந்து வருகிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக கை முனை முகாமைச் சேர்ந்தவர்கள் குழு, புலம் போன்ற பிரிவுகளைக் கைவிட்டு எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் கூட்டுறவு உற்பத்தி முறையைத் தழுவி வருவதாகவும் அறிந்தோம். எதிர்வரும் பெரும் போகத்தின்போது ஒவ்வொரு முகாமின் நிலத்துக்கும் சுணிசமான தொகையை ஒதுக்கி சிறிமாவோபுர பண்ணையில் உள்ள நிலம் அனைத்தையும் பண்படுத்தி விளைவிக்க முயற்சி செய்யப்படும்.

மற்றவர்களின் மேற்பார்வையோ வழி நடத்தலோ இல்லாது இளைஞர்கள் தங்களின் கூட்டுப்பண்ணையின் திட்டங்களை வகுத்து நிறைவேற்றவும், தங்களைத் தாங்களே வழிநடத்தி வெற்றி காணவும், அதன்மூலம் தங்களுக்கும், தாய்த் திருநாட்டுக்கும் உயர்வைத் தேடிக் கொள்ளப் பயிற்சி அளித்தலுமே சிறிமாவோபுர இளைஞர்கள் கூட்டுறவு பண்ணையின் குறிக்கோள் என திரு. காலிங்க முதலிகே அழுத்திக் கூறினார்.

இக்கூட்டுறவுப் பண்ணையில் உள்ள இளைஞர்கள் இதுவரையில் ஈட்டியுள்ள சாதனைகள் அவர்கள் இலட்சியத்தில் முழு வெற்றி காண்பார்கள் என்பதையே சுட்டிக்காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய தலைமை

## — ரஞ்சித் வணிகரத்ன —

**பதவிகள் சிலரை முக்கிய பேர்வழிகளாக விளங்கச் செய்கின்றன. சிலர் தமக்குள்ள சிறப்பியல்பினால் தாம் வகிக்கும் பதவிகளுக்குப் பெருமை தேடித் தருகின்றார்கள். சமூகத்தின்தலைமை ஒருவருக்கு எவ்வாறு வருகிறது, அதனை எப்படி அவர் வகிக்கிறார், தலைமை பெறுவதற்கு முன்னரும் பின்னரும் நடப்பவைதான் என்ன என்பவை போன்ற கேள்விகளை இக் கட்டுரை சுவையாக ஆராய்கிறது.**

கமவிடயங்களுக்கு ஒரு மூப்பர், சமய சம்பந்தமான அலுவல்களுக்கு ஒரு முதல்வர், அரசியல் துறைக்கு ஒரு தலைவர்— இவ்வாறு கிராமத்தில் பலதரப்பட்ட தலைவர்கள் இருத்தல் கூடும். இவர்களை விட, கிராமிய சமூகத்தில், பதவிகள் சிலவற்றை வகிப்பதன் காரணமாக, சிலர் முக்கியமானவர்களாகக் கருதப்படுவர். சங்கங்கள், சபைகளில் பதவிகள் வகிப்பதனாலும், சமூக அடிப்படையில் உயர்ந்த வாய்ப்புக்களை பெறுவதனாலும் அவர்கள் முறைமையான அல்லது சம்பிரதாய பூர்வமான தலைவர்களாக எண்ணப்படுகின்றார்கள். வேறு சிலர் ஏதோவிதத்தில் மக்களின் மரியாதைக்குப் பாத்திரமாகி அவர்களின் தலைவர்களாக விளங்குகின்றார்கள். இத்தகையவர்களை, சம்பிரதாயபூர்வமற்ற தலைவர்கள் எனலாம். இவர்கள் நிலம் புலம், பணம் போன்றவற்றின் அடிப்படையிலோ, அல்லது பரம்பரைச் செல்வாக்கு வாய்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதனாலோ அல்லது வயது, கல்வி, பண்பாடு, அண்டை அயலவர்களுக்குச் சேவை புரியும் மனப்பான்மை கொண்டிருந்தல் காரணமாகவோ மற்றவர்களிலும் பார்க்க அதிகம் மதிக்கப் படுகிறார்கள்.

தலைமை தாங்குபவர்களை வகைப்படுத்தல் ஒருபுறத்தில் வீண் முயற்சியாகவும், மறுபுறத்தில் சிக்கல்களைக் கிளப்பிவிடுவதாகவும் இருக்கக்கூடும். அப்படியானால், 'தலைமை தாங்கும்' நிலைக்கு ஒருவர் எப்படி வருகின்றார் என்ற கேள்வி எழுகிறது. எந்தக் கிராமத்திலோ பிரதேசத்திலோ தலைவர்கள் தோன்றுதற்குரிய சில பொது நியதிகள் இல்லாததால் இக் கேள்வியைப் பகுத்து விடை காணுதல் சிரமமாகும்.

தலைமை நிர்ணயம், நியதிகள், சம்பந்தங்கள், சூழ்நிலை ஆகியவற்றுக்கு ஏற்ப வேறுபடுவதுடன், அவற்றுக்கிடையே ஒருவித பரஸ்பர தொடர்பும் இருக்கவே செய்கிறது. இதன் காரணமாக தலைமைத் தன்மையை இலகுவில் விளங்கிக் கொள்வதும் கஷ்டமாகும். எனினும் நடத்திய கள ஆராய்ச்சிகள் மூலம் தலைமைத் தன்மையைப்பற்றி ஆராய்வதற்கு உள்ள சில அம்சங்களை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாக இருக்கும்.

முக்கியமான மனிதர்களாக வரவேண்டும் என்ற ஒரு திட்சித்தம் சிலரிடையே தலைதூக்கி நிற்கும். இத்தகையவர்கள் இச்சமூகத்தில் தனிப்பட்டவர்களுக்கும் சமூகத்திற்கும் இடையே நிலவும் தொடர்புகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த வல்லவர்களாக இருப்பார்கள். இதற்கு, சமூகம் தனக்கு உள்ள தடைகளை உடைத்தெறிய எப்போதுமே முயற்சித்துக் கொண்டிருத்தல் ஒரு ஏதுவாக உள்ளது. சமூகத்தின் இம்முயற்சிக்குத் தனிப்பட்டவரின் தன்முன்னேற்ற நாட்டம் எதிராக வந்து நிற்கின்றது. தனிப்பட்டவர்களது இத்தகைய நாட்டம், சமூக அமைப்பிற்கு இடையூறானதாக இருப்பதால், சமூகம் அத்தகையவர்களை எதிர்க்கத் தொடங்குகிறது. அத்தகையவர்களை எச்சரிக்கை செய்வதன் மூலமோ, கண்டிப்பதன் மூலமோ, ஒதுக்குதல் மூலமோ அல்லது சமூகத்திலிருந்து விலக்கி வைப்பதன் மூலமோ சமூகம் தன் எதிர்ப்பைத் தெரிவிக்கிறது.

தனிப்பட்டவர்கள், சமூகத்தின் எதிர்ப்பிலிருந்து தங்களது தனிப்பட்ட தன்மையைக் காப்பாற்றிக்கொள்ள சமூகத்தின் அதிகாரத்தைப் பெற்றுள்ள பல்வேறுசக்திகளுடன் வெவ்வேறு வழிகளில் தொடர்புகளையும் உறவையும் வைத்துக்கொள்வார்கள். பெரும்பாலும் கிராமிய சமூகத்தில் அதிகாரம் வகிக்கும் சபைகள் சங்கங்களுக்கு இடையில் போட்டி மனப்பான்மை நிலவுவதால், சமூகத்தில் முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் தனிப்பட்டவரது தன்னைப் பேணும் மனப்போக்கு அதனால் பாதிக்கப் படுகிறது. ஆயினும் சிலசமயங்களில் சமூகம், முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பட்டவர்கள் மீது. வெறுப்புக்கொள்வதன் காரணமாக, சமூகத்தின் அதிகாரச் சக்திகள் தம்மிடையே உள்ள போட்டிகளை மறந்து அத்தகைய தனிப்பட்டவர்களுக்கு எதிர்ப்புக் காட்டுகின்றன.

அப்படியான சமயத்தில் தனது சமூகத்திற்கு அப்பால் உள்ள அதிகார சக்திகளையும் தொடர்பையும் நிலைநாட்டிக்கொள்வதன் மூலமே சமூகத்தில் முன்னணிக்கு வரவேண்டும் என்ற தனது முயற்சியை தனிப்பட்டவர் தொடர்ந்து மேற்கொள்ள முடிகிறது. அப்படி அவர் தனது சமூகத்திற்குப் புறத்தே உள்ள சக்திகளுடன் தொடர்பு வைத்துக் கொள்வதன் மூலம் தன் சமூகத்தில் தனக்கு எதிர்ப்புத் தோற்றுவிக்கும் சக்திகளை முறியடிக்கப் பார்ப்பார். அவர் நாடும் முன்னணி இடத்தைப் பலப்படுத்திக் கொள்வதே அத்தகைய முயற்சியின் நோக்கமாகும்.

2. (அ) தானே நேரடியாகத் தொடர்புபடாது வேறு ஒருவர் மூலமாகத் தனக்கு வேண்டியவற்றை நிறைவேற்றிக்கொள்ளுதற்காகவும்;

(ஆ) தன்னிலும் பார்க்க சமூக அந்தஸ்திலும், அனுபவத்திலும் மிக்கவர்களிடம் குறித்த பதவிகளுக்கு எதிர்பார்க்கப்படும் தகைமைகள் இருக்கிறது என அவர் ஏற்றுக்கொள்ளுவதனாலும்;

(இ) மற்றவர்களைப் பதவிக்கு வரச் செய்வதன்மூலம் சமூகத்தில் தனது அந்தஸ்துக்காகவும், சமூக அந்தஸ்துக்காகவும்போட்டி போடுபவர்களையும் சமூகத்தையும் அடக்கியாளலாம் என்ற எண்ணம் கொள்வதனாலும், தனிப்பட்டவர்கள் சிலர் மற்றவர்களைச் சங்கம், சபைகளின் பதவிகளை வகிக்கச் செய்கின்றனர்.

இவ்வாறு பதவிக்கு வந்தவர்கள் அநேக சந்தர்ப்பங்களில் பதவிக்கு வந்த பின்னர் தங்கள் நிலையைப் பலப்படுத்திக்கொள்ளவும், வகிக்கும் பதவிக்கு மேல் உள்ள பதவிகளைப் பிடித்துக்கொள்ளவும் முயற்சிப்பார்கள்.

(அ) தன்னால் மற்றவர்களை அடக்கியாள முடியும் என்ற எண்ணத்தை வருவித்துக்கொள்வதனாலும்;

(ஆ) பதவி பெற்ற பின்னர், சமூகத்தில் மேலும் மேலும் முன்னேறுதற்குப் புதியமார்க்கங்கள் ஒருவருக்கு இருப்பது தோன்றத்தொடங்குதலினாலும்,

(இ) பதவி, அதன் அதிகாரங்கள், சமூகத்தில் கிட்டும் பலன்கள்; ஆகியவற்றின் சுவையைக் கண்டவர்கள் மீண்டும் பதவி இல்லாத நிலைக்கு வருதல் மனதைப் பொறுத்தவரையிலும் சமூக - பொருளாதார நிலையைப் பொறுத்த வரையிலும் மிகக் கஷ்டமானதொன்றாக இருப்பதனால் இவர்கள் இவ்வாறு முயற்சிக்கிறார்கள்.

இதன் நிமித்தம் பதவிகளைப் பெறுபவரின் இலட்சியம் அவரது சொந்தவிருப்பு வெறுப்புக்கள், தேவைகளுக்கு ஏற்ப அமைவதுடன், தன்னைப் பதவி பெறச் செய்தவர்களிடமிருந்து படிப்படியாகத் தூரே விலகியும் செல்வர். இதனால் அவரைப்பதவியில் அமர்த்தியவர்களுக்கு அவர்மீது மனக்கசப்பு உண்டாகும். இவ்விதமனக் கசப்பின் விளைவாக முன் குறிப்பிட்டதுபோல், சமூகம் வழங்கும் தண்டனைக்கு அவர் ஆளாக வேண்டி வரும்.

அப்போது சமூகத்தின் வெறுப்புக்கு ஆளானவர்களும் தங்கள் எதிர்ப்பைச் சில விதங்களில் காட்டுகிறார்கள். தங்களுக்குச் சாதகமானவர்களுக்குச் சலுகைகளையும் உதவி ஒத்தாசைகளையும் பெற்றுக்கொடுத்து அவர்களின் ஆதரவைத் தமக்குத் தேடித் தமது நிலையைப் பலப்படுத்திக்கொள்ளுதல் ஒருமுறை. தம்மை எதிர்ப்பவர்களைப் பலவீனப்படுத்தற்கு அவர்களை எதிர்ப்போருடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்வதன் மூலம் தங்கள் எதிர்ப்பைக் காட்டுதல் மற்றைய வழி.

3. சமூக நெருக்கடிகளுக்கும் அதிகார சக்திகளுக்கும் இடையில் சிலர் நடுநிலைமை வகிப்பதனால்,ஏனையவர்களினால் அத்தகையவர்கள் முக்கியமானவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஒன்றுக்கொன்று எதிரான சமூக அதிகார சக்திகளுக்கிடையே செய்திகள் பரிமாறிக்கொள்வதற்கும், எதிர்ச்சக்திகள் மோதிக்கொள்ளாது சமன்பாட்டை நிலை நிறுத்திக்கொள்வதற்கும் இப்படிப்பட்ட நடுநிலை வகிக்கும் பேர்வழிகள் பெரும் துணைபுரிகின்றனர்.

4. சிலர் தாம் வகித்த பதவியிலிருந்து விலகிய பின்னும் அப்பதவியினாலும் அதனுடன் கொண்டிருந்த தொடர்பினாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருந்த சமூக தலைமையைத் தொடர்ந்தும் அனுபவித்து வருகிறார்கள். இதற்கு முக்கிய காரணம் அவர்கள் வகித்த பதவியின் நிமித்தம் அவர்களுக்கு மற்றவர்களிலும் பார்க்க அதிக அறிவு கிட்டிவிடுதலே யாகும். அத்தகையவர்கள் தமக்கெனப் பெற்றுள்ள இடத்தைப் பெரும்பாலும் ஏனையவர்களும்ஒப்புக்கொண்டுவிடுகிறார்கள். அத்துடன், அவர்கள் தங்கள் சிறப்பியல்புகளை அடுத்தவர்களுக்குக் காட்டவும் செய்வார்கள்.

5. நீண்டகாலம் சங்கம், சபைகளில் பதவி வகித்த சில முக்கியஸ்தர்கள் தாம் வகிக்கும் பதவிக்குத் தம்மிலும் வயதில் இளையவர்கள் போட்டிபோடுவதை எதிர்ப்பார்கள்; சகிக்கமாட்டார்கள். சங்கம், சபைகளில் உள்ள பல்வேறு பதவிகளுக்குச் சிலர் நியமனம் பெறுவதை பல நியதிகளைச் சுட்டிக் காட்டிக் கட்டுப்படுத்துதல், கிராமத்திலுள்ள போட்டிக்குழுக்களை ஒன்றோடு ஒன்று மோத வைத்தல், தலைதூக்கி வருபவர்களை எச்சரித்துப் பயமுறுத்தியோ, நிந்தனை செய்தோ, ஒதுக்கி வைத்தோ பலவீனப்படுத்தல் போன்ற வழிமுறைகளைக் கையாண்டு சமூகத்தில் தமக்குள்ள அதிகார பலத்தைத் தொடர்ந்து அவர்கள் வகித்துவருவார்கள்.

தலைமை வகிப்பதற்கு கல்வி, செல்வம், குடும்பச் சிறப்பு போன்றவை அவ்வளவு முக்கியமான காரணிகள் அல்ல என்பது ஆய்வுகள் பலவற்றின் மூலம் புலப்பட்ட உண்மையாகும்.

---

**ஓர் ஏக்கரில் 100 புசல் தரக்கூடிய நெல் இனங்கள் இவை**


பிஜி **34 - 8** (மூன்று மாதப் பயிர்)
பிஜி **34 - 6** (மூன்றே கால் மாதப் பயிர்)
பிஜி **11 - 11** (நான்கு மாதப் பயிர்)

---




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்க்கு விளையாட்டும்-படிப்பும்




பென்சில் ஒன்றால் 'அ' விலிருந்து 'ஆ வரை கோடு கீறுங்கள். ஆனால் ஒன்று. ஒரே இடத்தில் இரண்டுமுறை கீறப்படக் கூடாது. பென்சிலைக் கடதாசியிலிருந்து உயர்த்தவும்படாது.

கமக்காரர் ஒருவருக்கு எதிரில் உள்ள அமைப்பில் காணித்துண்டு ஒன்று இருந்தது. இக்காணியைச் சுத்தப்படுத்தி அதில் தோடை மரங்களை நாட்ட நினைத்தார். காணியை முழுக்கப் பயன்படுத்தற்காக **21** தோடங்கன்றுகளை **5** நேர் வரிசையில், வரிசைக்கு **5** கன்றுகள் வீதம் நட்டார். உங்களாலும் அப்படிச் செய்ய முடியுமா? இங்குள்ள படத்தில் புள்ளியிட்டுப் பாருங்கள்.




அண்ணன் சொன்னான்: "தம்பி உன்னிடம் உள்ள சில்லறைக் காசில் ஒன்றை எனக்குத் தா. அப்போது, உன்னிடமும் என்னிடமும் ஒரே தொகை காசே இருக்கும்". "இல்லை, அண்ணா, உங்களிடம் உள்ள சில்லறைக் காசில் ஒன்றை எனக்குத் தாருங்கள். அப்போது உங்களிடம் இருப்பதைப்போல் இரண்டு மடங்கு காசு என்னிடம் இருக்கும்'' என்றான் தம்பி. அண்ணனிடமும் தம்பியிடமும் எவ்வளவு காசு இருந்தது?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'அ' இலிருந்து 'ஆ' வரை பென்சிலை உயர்த்தாது ஒரே இடத்தில் இருமுறை கீறுது படத்தில் காட்டியபடிதான் கீறுதல் வேண்டும்.

ஒரே கோட்டில் 5 கன்றுகள் வீதம் 5 நேர் கோடுகளில் 21 கன்றுகளை நடுவது எப்படி எனக் காணமுடிந்ததா? படத்தில் உள்ள படியே கமக்காரர் கன்றுகளை நாட்டினுர். நீங்கள் எப்படிப் புள்ளி வைத்தீர்கள்?



OOTRU ORGANISATION
MARI AMMAN LANE.
THIRUNELVELY.
JAFFNA.
SRI LANKA.




தம்பியிடமிருந்து தனக்கு ஒரு காசு கிடைத்தால் அண்ணன் தம்பி இரண்டு பேரிடமும் ஒரே தொகை காசு இருக்கும் என்றுன் அண்ணன். ஆனுல் அண்ணன் ஒரு காசு கொடுத்தால் தன்னிடம் அண்ணனிடம் உள்ளதைப்போல் இரண்டு மடங்கு தொகை காசு இருக்கும் என்றுன் தம்பி. அண்ணனிடம் இருந்த காசு ஐந்து. தம்பியிடம் இருந்த காசு ஏழு. சரிதானு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தினால் 29, ஜயந்தவீரசேகர மாவத்தை. கொழும்பு 10-ல் உள்ள குணரத்ன அன் கம்பெனியில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org